[12th September 1959

அகதிகளுக்கு மறுபடியும் திட்டங்கள் தீட்டி அவர்களுடைய புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளை எடுக்க இந்த சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிபாரிசுகளைச் செய்யும்போது எல்லா சிபாரிசுகளும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல. அகதிகளுக்கு எவ்வளவோ வசதிகள் அளிக்கப்படுகின்றன. அவைகளை அளிக்க மத்திய சர்க்கார் இணங்கியிருக்கிறது. உத்தியோக விஷயத்திலும். பர்மிட் விஷயத்திலும் ஒத்துக்கொள்ளவில்லையென்றால் மற்ற அகதிகளுக்கும் இதே நிலைதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Dog bites

* 347 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் ஜில்லாவில் 1958-59-ல் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவர்களில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No data regarding dog bites in general is available.

(*b*) 33.

SRI P. G. MANICKAM : நாய் கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜில்லா தலைமை ஆஸ்பத்திரியில்தான் போதுமான வைத்திய வசதி செய்யப்பட்டிருக்கிறது. தாலுக்கா தலைமை ஆஸ்பத்திரிகளில் மருந்து இல்லை என்று சொல்லுகிறார்கள். கிராமவாசிகளுக்கு தலைமை ஆஸ்பத்திரிக்குச் செல்ல வசதியும் பண வசதியும் இல்லாது இருப்பதால், தாலுக்கா தலைநகர ஆஸ்பத்திரிகளுக்கு போதுமான மருந்துகள் அனுப்ப கவனம் செலுத்துவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : முன்பு இதற்கெல்லாம் கூனூருக்குத்தான் போகவேண்டும். இப்போது தலைமை ஆஸ்பத்திரிகளிலும், கூடுமான வரையில் மற்ற ஆஸ்பத்திரிகளிலும் இந்த மருந்து கிடைக்க ஏற்பாடு இருக்கிறது.

Cooum River

* 348 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) how often the Cooum river in the City of Madras is being flushed by letting in sea water;

(*b*) whether it has any salutary effect in eradicating the foul smell emanating from the river;

(*c*) whether there is any proposal to deepen this river to enable the water to flow freely thus preventing stagnation; and